தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2021

**17 வயதுப்பிரிவு**
(01.01.2004 – 31.12.2005 வரையில் பிறந்தோர்)

## யாழ்ப்பாணப் பொதுநூலக எரிப்பு ஓர் இன அழிப்பு

பல்துறை அறிஞர்கள் வாழும் இடம் நூலகம் என்பார்கள். அதற்குச் சான்றாக உலகின் மூத்த மொழிகளில் ஒன்றாம் தமிழின் மிகத் தொன்மையான நூல்களையும் தமிழினத்தின் வரலாற்றுப் பெருமைகளையும் ஓலைச் சுவடிகளாகவும் கையெழுத்து மூலங்களாகவும் நூல்களாகவும் இதழ்களாகவும் கொண்ட அறிவாலயமாக நிமிர்ந்து நின்றது யாழ்ப்பாணப் பொதுநூலகம்.

ஈழத் தமிழர்களின் ஒட்டுமொத்த உழைப்பால் பன்மொழி நூல்களைப் படித்தறியக் கூடிய இடமாகப் பன்னாட்டளவில் பேசப்பட்ட யாழ்ப்பாண நூலகம், தமிழர்களின் அறிவுப் பசிக்குத் தீனியிட்டு வளர்த்தது. கல்வியே மூலதனமாகக் கொண்ட ஈழத்தமிழினத்தின் கல்வியைக் கருவறுக்கத் திட்டமிட்ட ஆளுமினம், முதலில் கல்வித்தரப்படுத்தலைக் கையிலெடுத்தது. அதன் தொடர்ச்சியாக, ஈழத்தமிழரின் அறிவுச் சுரங்கமாகத் திகழ்ந்த யாழ்ப்பாண நூலகத்தை இலக்கு வைத்தது. 1981 மே 31 ஆம் நாள் ஆளும் அரசும் அதன் அடிவருடிகளும் இணைந்து யாழ்ப்பாண நூலகத்தைத் தீக்கிரையாக்கினர். கொழுந்து விட்டு எரிந்த தீயில் அங்கிருந்த ஏட்டுச் சுவடிகளும் நூல்களும் கையெழுத்து மூலப்பிரதிகளும் எரிந்து சாம்பராகின.

அன்றே இனவாதத்தின் உச்சத்தை சிறிலங்கா அரசு வெளிப்படுத்தி நின்றது. ஓர் இனத்தின் வரலாற்றுப் பெருமையாய் நிமிர்ந்து நின்ற தென்னாசியாவின் மிகப்பெரிய நூலகத்தை எரித்தழித்தது திட்டமிட்ட இன அழிப்பின் வடிவமே! சிறிலங்கா அரசு யாழ்ப்பாண நூலகத்தை எரித்துத் தமிழின அழிப்பை அரங்கேற்றி நாற்பதாண்டுகளாகிய நிலையிலும், அந்த இன அழிப்புச் செயலைப் புரிந்தவர்கள் யாரும் இன்றுவரை நீதியின் முன் நிறுத்தப்படவில்லை.

இந்த நாற்பதாண்டுகளில் யாழ்ப்பாண நூலக எரிப்பு மட்டுமல்ல, தமிழினத்தின் மீது சிறிலங்கா அரசால் நடாத்தப்பட்ட போரின்போது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களாலும் இடப்பெயர்வுகளாலும் நிலப்பறிப்புகளாலும் பள்ளி நூலகங்கள், கிராம வாசிகசாலைகள், தனிப்பட்ட வகையில் மக்களால் சேகரிக்கப்பட்ட நூல்கள் என பல நூறாயிரம் நூல்களும் ஆவணங்களும் திட்டமிட்டு அழிக்கப்பட்டதால், தமிழர்களுக்குத் தேவையான வரலாற்று ஆவணங்களையும் தொன்மையான நூல்களையும் பெற்றுப் படிக்க முடியாத நிலைக்கு எமது இளையதலைமுறையினர் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழர் ஈழம் முழுவதும் பரந்து வாழ்ந்ததையும் தமிழரே ஈழத்தின் தொன்மைக் குடிகள் என்பதையும் உறுதிப்படுத்த வல்ல ஆவணங்களை எரித்தழித்த சிங்கள அரசு, நீண்ட காலத் திட்டமிடலுடனேயே அன்று செயற்பட்டது. இன்றும் செயற்பட்டுவருகிறது.

பன்மொழிப் புலமையுடன் புலம்பெயர் நாடுகளிலே வாழ்ந்து வரும் இளையவர்களாகிய நாம், நாங்கள் வாழ்கின்ற நாட்டு நூலகங்களிலே காணப்படும் தமிழர் வரலாறுகள் சார்ந்த பிறமொழி நூல்களையும் பிற இனத்தவரின் பயணக் குறிப்புகளையும் தேடிப்பெற்றுப் படிப்போம். அவற்றை ஆவணப்படுத்துவோம். கணினி வழி அவற்றை அனைவரும் அறியச்செய்வோம். சிறிலங்கா அரசின் திட்டமிட்ட பொய்யுரைகளைத் தகர்ப்போம்.

நன்றி,
வணக்கம்.